ந.க.எண்.1343/2017/வ1 நாள்: 31 .05.2017.

மாவட்ட வன அலுவலகம்,
திண்டுக்கல் வனக்கோட்டம்,
திண்டுக்கல்.

பொருள் :- மனு - திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தொப்பம்பட்டி கிராமம் - புல எண்: 103-ல் கண்ட 1.50 ஏக்கர் பட்டா நிலத்திற்கு சொந்த நான்கு சக்கர வாகனங்கள் சென்றுவர அனுமதி கோரியது - தொடர்பாக..

பார்வை:- 1) திரு.அ.ரவி த/பெ அழகர்சாமி, அம்பாத்துரை, திண்டுக்கல் மனு எண்: இல்லை நாள்:07.04.2017.
2) வனச்சரக அலுவலர், சிறுமலை கடித எண் இல்லை நாள்:

********

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தொப்பம்பட்டி கிராமம், புல எண்:103-ல் கண்ட 1.50 ஏக்கர் நிலத்திற்கு தனது நான்கு சக்கர வாகனங்கள் சென்றுவர அனுமதி கோரியுள்ளதனை தொடர்ந்து மேற்கண்ட தளத்தினை களத்தணிக்கை செய்து அறிக்கை செய்யும்படி சிறுமலை வனச்சரக அலுவலர் பணிக்கப்பட்டதனை தொடர்ந்து பார்வை-2-ல் கண்ட வனச்சரக அலுவலர் சிறுமலையின் கடிதத்தில் மேற்படி புல எண்ணானது சிறுமலை வனச்சரகம், சிறுமலை வட மேற்கு சரிவு காப்புக்காட்டில் அமைந்துள்ளது என்றும், இப்பட்டா நிலத்திற்கு சென்றுவர அரசு அறிவிக்கையில் தொப்பம்பட்டி முதல் தொழுக்காடு வழியாக சிறுமலை புதூருக்கு செல்ல 4 கெஜம் (3.60 மீ) அகலத்திலும் இப்பதையிலிருந்து புல எண்:103-க்கு செல்ல கிளை பாதையானது 2 கெஜம் (1.80 மீ) அகலத்திலும் பாதை உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து மேற்படி பாதையில் திரு.அ.ரவி என்வரின் நான்கு சக்கர வாகனங்கள் விவசாய விளைபொருட்களை கொண்டு செல்வதற்கும் விவசாயப் பணி மேற்கொள்ள கூலி ஆட்களை அழைத்துச் செல்வதற்கும் அனுமதி வழங்கலாம் என பரிந்துரைத்ததன் பேரில் கீழ்கண்ட நிபந்தனைகளின்படி தற்காலிகமாக ஒரு ஆண்டுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

1) வனப்பாதையில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மட்டுமே வாகனங்கள் சென்றுவர வேண்டும்.
2) வாகனங்கள் சென்று வரும் பொழுது வனத்திற்கோ, வன உயிரினங்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தக் கூடாது.
3) பட்டா நிலத்தில் வனப்பணியாளர்களின் அனுமதியின்றி நெருப்பு வைக்கக் கூடாது.

மேற்கண்ட நிபங்தனைகளை மீறும்பட்சத்தில் இவ்வனுமதியினை எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்பட்டு வனச்சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/து.வெங்கடேஷ்,
மாவட்ட வன அலுவலர்,
திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல்.

பெறுநர்:

திரு.அ.ரவி,
த/பெ சீ.அழகர்சாமி,
2/1, குவாரி ரோடு, சௌந்தரம் நகர்,
அம்பாத்துரை, திண்டுக்கல்.

நகல்: வனச்சரக அலுவலர், சிறுமலை.

மேற்படி பாதையில் திரு.அ.ரவி என்பவரின் சொந்த வாகனங்கள் மட்டும் சென்று வருவதனை உறுதி செய்ய களப்பணியாளர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு வனச்சரக அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

16/6/17
வரைதொழில் அலுவலர்

16/6/17